RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING


மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-5 | 05 ஜனவரி ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## டெல்லி சட்டப்பேரவை தேர்தல்: 29 வேட்பாளர்கள் கொண்ட முதல் பட்டியலை வெளியிட்டது பாஜக

புதுடெல்லி, ஜன.5



புதுடெல்லி யூனியன் பிரதேசத்துக்கான சட்டப்பேரவை தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி 2025) நடைபெற உள்ள நிலையில், 29 வேட்பாளர்களைக் கொண்ட முதல் பட்டியலை பாஜக இன்று (ஜன. 4) வெளியிட்டுள்ளது.

பாஜக மத்திய தேர்தல் கமிட்டியின் ஒப்புதலை அடுத்து, வேட்பாளர்கள் குறித்த முதல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, ரோகினி தொகுதியில் விஜேந்தர் குப்தா, ஜனக்புரி தொகுதியில் ஆஷிஷ் சூத், பிஜ்வாசன் தொகுதியில் கைலாஷ் கஹ்லோட், புதுடெல்லி தொகுதியில் பர்வேஷ் சாஹிப் சிங் வர்மா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.


ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவரும், டெல்லி முதல்வருமான அதிஷியை எதிர்த்து கல்காஜி தொகுதியில் பாஜகவின் ரமேஷ் பிதுரி போட்டியிடுகிறார். இத்தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக அல்கா லம்பா நிறுத்தப்பட்டுள்ளார்.

ஆர்.கே. புரம் தொகுதியில் அனில் சர்மா, மாளவியா நகர் தொகுதியில் சதீஷ் உபாத்யாய், பட்பர்கஞ்ச் தொகுதியில் ரவீந்தர் சிங் நேகி, மாடல் டவுனில் அசோக் கோயல் ஆகியோர் நிறுத்தப்பட்டுள்ளனர். கரோல் பாக் (எஸ்சி) தொகுதியில் துஷ்யந்த் குமார் கவுதம் நிறுத்தப்பட்டுள்ளார். ஷாலிமார் பாக் தொகுதியில் ரேகா குப்தா நிறுத்தப்பட்டுள்ளார்.

ஜங்புரா தொகுதியில் பாஜக சார்பில் சர்தார் தர்விந்தர் சிங் மர்வா போட்டியிடுகிறார். அவருக்கு எதிராக டெல்லி முன்னாள் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் முன்னாள் மேயர் ஃபர்ஹாத் சூரியை காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தியுள்ளது.

## “காஷ்மீர் பிரச்சினையை ஐநா சபைக்கு நேரு கொண்டு சென்றிருக்கக் கூடாது” கரண் சிங்

புதுடெல்லி, ஜன.5



காஷ்மீர் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு ஜவர்ஹர்லால் நேரு எடுத்துச் சென்றிருக்கக்கூடாது; அவர் செய்த சில தவறுகளில் அதுவும் ஒன்று என்று முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான கரண் சிங் தெரிவித்துள்ளார்.

பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த சிறப்பு பேட்டியில், “நான் 18 வயதில் அரசியலுக்கு வந்தேன். ஏனென்றால் என் தந்தை மிகவும் வேதனையான சூழ்நிலையில் மாநிலத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவாகியது. அதற்கு காரணம் ஷேக் அப்துல்லா. ஏனென்றால், ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று ஒரு வாக்கெடுப்புக்கு நாம் ஒப்புக்கொண்டோம். நாம் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றிருக்க வேண்டிய அவசியமில்லை. ஜவஹர்லால் நேரு காஷ்மீர் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் சென்றது ஒரு தவறு. பண்டிட் நேரு செய்த சில தவறுகளில் இதுவும் ஒன்று. மவுண்ட்பேட்டன்தான் அவரை அதற்குள் தள்ளினார் என்று நினைக்கிறேன். இந்த முடிவு நிலைமையை மேலும் சிக்கலாக்கியது.

தனது வாழ்நாள் முழுவதும் தீவிரமான டோக்ரா எதிர்ப்பு உணர்வை ஷேக் அப்துல்லா கொண்டிருந்தார். மகாராஜா ஹரி சிங்கிற்கு எதிராக ஷேக் அப்துல்லா பரப்புரை செய்தார். இறுதியாக அவர், நேருவிடம் சென்று மகாராஜா ஹரி சிங் மாநிலத்தில் இருக்கும் வரை தன்னால் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று கூறினார். இதனால், என் தந்தை மாநிலத்தைவிட்டு வெளியேறினார். எனினும், 14 ஆண்டுகளுக்குப் பிறகு நாங்கள் சந்தித்துக் கொண்டபோது, ‘புலி எப்படி இருக்கிறது?’ (என் புனைப் பெயர்) என்று கேட்டார். எங்கள் உரையாடலால் அனைத்து பதற்றமும் மறைந்தது” என தெரிவித்தார்.

“ஷேக் அப்துல்லாவின் மகன் டாக்டர் ஃபரூக் அப்துல்லா தீவிர அரசியலுக்கு வந்தது பாராட்டுக்குரியது. இதன்மூலம் அவர் தனது தந்தைக்கு பெருமை சேர்த்தார். ஃபரூக்கின் மகன் உமர் அப்துல்லா, ஒரு நம்பிக்கைக்குரிய அரசியல் எதிர்காலம் கொண்ட சமநிலையுடன் இருக்கும் நபர்.” என்றும் கரண் சிங் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டது குறித்த கேள்விக்கு பதில் அளித்த கரண் சிங், “ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை யூனியன் பிரதேசமாக மாற்றியது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் கிரீடம் என்று இந்திய அரசு கூறிய போதிலும், அது யூனியன் பிரதேசமாக தரம் தாழ்த்தப்பட்டது. எனவே இது சரிசெய்யப்பட வேண்டிய ஒன்று. இந்திய அரசு கூடிய விரைவில் முழு மாநில அந்தஸ்தை வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது.” என கூறினார்.

ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்துக்கான சட்டப்பிரிவு 370 ரத்து செய்த பிறகு ஜம்மு காஷ்மீரில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த கேள்விக்கு பதில் அளித்த கரண் சிங், “அரசியல் ரீதியான முழு ஆட்டமும் மாறிவிட்டது. பிரிவு 370 ரத்து செய்யப்படுவதற்கு முன்பு, மாநிலத்திற்கு எவ்வளவு சுயாட்சி கிடைக்க வேண்டும் என்பதுதான் முக்கிய கேள்வியாக இருந்தது. அதற்காகத்தான் போராட்டங்கள் நடந்தன. ஆனால், 370வது பிரிவை ரத்து செய்ததன் மூலம், இப்போது சுயாட்சி பற்றிய கேள்வியே எழவில்லை. மாநில அந்தஸ்துடன் குடியுரிமைச் சட்டங்களும் ஹிமாச்சலில் உள்ளது போல் இருக்க வேண்டும். எல்லோரும் ஹிமாச்சலில் நிலம் வாங்க முடியாது. ஏனெனில், 271, 272 பிரிவுகளின் கீழ் உள்ள குடியுரிமைச் சட்டங்கள் இதனை கட்டுப்படுத்துகின்றன.” என்று அவர் கூறினார்.

ஜம்மு காஷ்மீரில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்கள் பற்றி குறிப்பிடுகையில், “10 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தல் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. 29 இந்து தொகுதிகள் பாஜகவுக்கும், பெரும்பான்மையான முஸ்லிம் தொகுதிகள் தேசிய மாநாட்டு கட்சிக்கும் சென்றது.” என கரண் சிங் குறிப்பிட்டார்.

## 2025ம் ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி தொடக்கம் களைகட்டியது தச்சங்குறிச்சி

புதுக்கோட்டை, ஜன.5




புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை அருகே தச்சங்குறிச்சியில் இன்று (ஜன.4) ஜல்லிக்கட்டு தொடங்கி நடைபெற்று வருகிறது.

தமிழர்களின் பாரம்பரியம் மற்றும் வீரத்தை பறைசாற்றும் விதமாக ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், தமிழகத்தில் ஒவ்வொரு அண்டும் ஜனவரியில் தொடங்கி மே மாதம் வரை ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. ஜல்லிக்கட்டுக்கான அனுமதி, அதில் பங்கேற்கும் மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளுக்கான பதிவுகள் அனைத்தும் இணையதளம் வழியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டாக கந்தர்வக்கோட்டை அருகே தச்சங்குறிச்சியில் தொடங்கியது. ஆட்சியர் எம்.அருணா தலைமையில் ஜல்லிக்கட்டு உறுதிமொழியை மாடுபிடி வீரர்கள் உள்ளிட்டோர் காலை 8 மணியளவில் எடுத்துக் கொண்டனர்.பின்னர், மாநில சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கொடி அசைத்து போட்டியை தொடங்கி வைத்தனர்.

இதைத்தொடர்ந்து, புதுக்கோட்டை, திருச்சி, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த காளைகள் அவிழ்த்து விடப்பட்டு வருகின்றன. சுமார் 600 காளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுபோல, சீறிப்பாயும் காளைகளை அடக்குவதற்காக சுழற்சி முறையில் 300 வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜல்லிக்கட்டை காண்பதற்காக பல்வேறு பகுதியில் இருந்து ஏராளமானோர் திரண்டுள்ளனர். பாதுகாப்பு பணிகளை கந்தர்வக்கோட்டை போலீஸார் ஈடுபட்டுள்ளனர். காயம் அடையும் வீரர்கள் உள்ளிட்டோர் மற்றும் காளைகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் சுகாதாரத் துறையினர் மற்றும் கால்நடைமருத்துவக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

## விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்தில் 6 பேர் பலி விதிமீறி குத்தகைக்கு விட்டதால் விபரீதம்!

விருதுநகர், ஜன.5



விருதுநகர் அருகே பொம்மையாபுரம் கிராமத்தில் சாய்நாத் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 4 அறைகள் தரைமட்டமானதில் 6 பேர் உயிரிழந்தனர். இந்த ஆலையை விதிமீறி குத்தகைக்கு விட்டது, அனுபவம் இல்லாத தொழிலாளர்களை ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்தியது உள்ளிட்ட காரணங்களால் விபத்து நடந்தது முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிவகாசி அருகே ஆலமரத்துபட்டி பகுதியை சேர்ந்தவர் பாலாஜி. இவர் விருதுநகர் அருகே வச்சகாரப்பட்டி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பொம்மையாபுரம் கிராமத்தில் சாய்நாத் ஃபயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். இந்த ஆலையில் உள்ள 84 அறைகளில் 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பேன்சிரக பட்டாசுகள் உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று காலை 84 தொழிலாளர்கள் பணிக்கு வந்திருந்தனர். பட்டாசு உற்பத்திக்கான ரசாயன பொருட்களை கலவை செய்யும் போது, காலை 9.40 மணி அளவில் உராய்வு காரணமாக திடீர் வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் மருந்து கலவை செய்யும் கோட்டை சுவர் அறை, வேதிப்பொருள் அறை உட்பட 4 அறைகள் முற்றிலும் இடிந்து தரைமட்டமாகின. தகவலறிந்து வந்த விருதுநகர், சிவகாசி, சாத்தூர் தீயணைப்புதுறையினர் தீயை அணைத்து, ஜேசிபி இயந்திரம் மூலம் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டனர்.

இந்த விபதில் குருந்தமடத்தை சேர்ந்த வேல் முருகன் (54), காமராஜ், செட்டிக்குறிச்சியை சேர்ந்த நாகராஜ் (37), வீரார்பட்டியை சேர்ந்த கண்ணன், அருப்புக்கோட்டையை சேர்ந்த மீனாட்சிசுந்தரம் (46), சிவக்குமார் (56) ஆகிய 6 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் ஆவுடையாபுரத்தைச் சேர்ந்த முகமது சுதின் என்பவர் காயமடைந்தார். விபத்து குறித்து வழக்கு பதிவு செய்த வச்சகாரப்பட்டி போலீஸார், போர்மேன்கள் பாண்டியராஜ் (23) பிரகாஷ் (27) ஆகியோரை தேடி வருகின்றனர். அவர்களை பிடித்து விசாரித்தால் விபத்துக்கான காரணம் தெரியவரும் என போலீஸார் தெரிவித்தனர்.

விதிமீறலால் விபத்து: விபத்து நடந்த சாய்நாத் பட்டாசு ஆலை உரிமம் பாலாஜி என்பவர் பெயரில் உள்ள நிலையில், விதிமீறி சட்ட விரோதமாக குத்தகைக்கு எடுத்து, மற்றொரு பட்டாசு ஆலை உரிமையாளர்கள் சாய்நாத் பட்டாசு ஆலையில் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ளார். அங்கு அனுபவமில்லாத தொழிலாளர்களை ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்தியது, போதிய பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாதது, வழிமுறைகளை பின்பற்றாதது உள்ளிட்ட காரணங்களால் விபத்து நடந்துள்ளது முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

4 பேர் மீது வழக்கு: இதற்கிடையில், ஆலை உரிமையாளர்கள் பாலாஜி, சசிபாலன், மேலாளர் தாஸ், போர்மேன் பிரகாஷ் உள்ளிட்ட 4 பேர் மீது அஜாக்கிரதையாக செயல்பட்டு உயிரிழப்பு ஏற்படுத்தியது, உரிய பாதுகாப்பின்றி தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தியது உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் வச்சக்காரப்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெசோ அதிகாரிகள் ஆய்வு: சிவகாசியில் உள்ள மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிப்பொருள் கட்டுப்பாட்டுத்துறை அலுவலக கிளையின் முதன்மை கட்டுப்பாட்டு அலுவலர் (பொறுப்பு) கந்தசாமி தலைமையிலான பெசோ அதிகாரிகள் விபத்து நடந்த பட்டாசு ஆலையில் நேரில் ஆய்வு செய்து வேதிப்பொருள் மாதிரிகளை சேகரித்தனர்.

விருதுநகர் மாவட்டம் கோட்டையூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் தனியார் பட்டாசு ஆலையில் இன்று (ஜன.4) காலையில் மருந்து கலக்கும் அறையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்த அருப்புக்கோட்டையைச் சேர்ந்த சிவகுமார் (56) குருந்தமடத்தைச் சேர்ந்த வேல்முருகன் (54) காமராஜ் (54) வீரார்பட்டியைச் சேர்ந்த கண்ணன்(54), அருப்புக்கோட்டையைச் சேர்ந்த மீனாட்சிசுந்தரம் (46) செட்டிக்குறிச்சியைச் சேர்ந்த நாகராஜ் (37) ஆகிய 6 பேரின் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், விபத்தில் காயமடைந்து மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஆவுடையாபுரத்தைச் சேர்ந்த முகமது சுதீன் என்பவருக்கு சிறப்பு சிகிச்சையளிக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வருபவருக்கு 1 லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட முதல்வர் ஸ்டாலின் உத்தர விட்டுள்ளார்.

## “கே.பாலகிருஷ்ணனுக்கு என்ன நெருடலோ தெரியவில்லை?” அமைச்சர் சேகர்பாபு பாய்ச்சல்

சென்னை, ஜன.5




“நேற்று முன்தினம் வரை திமுக ஆட்சியை பாராட்டிய கே. பாலகிருஷ்ணனுக்கு என்ன நெருடல்?. அவரின் கோரிக்கைகளை அறிந்து கொண்டுதான், அதற்கு உண்டான பரிகாரத்தை காண முடியும்.” என அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முன்னதாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாநில மாநாடு விழுப்புரத்தில் ஜனவரி 3 ஆம் தேதி நடைபெற்றது. அதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பேசியது: அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை நிகழ்வை அரசியல் செய்ய பாஜக நினைக்கிறது. தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகம் மட்டுமல்ல, நாட்டின் எந்த பகுதியிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நிகழும் போது அதற்கு எதிராகப் போராடும் இயக்கமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இருந்து வருகிறது.

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை நிகழ்வை அரசியலாக்கும் செயலில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை ஈடுபடுகிறார். ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் பொள்ளாச்சியில் பாலியல் வன்கொடுமை நிகழ்ந்த போது,அரசை எதிர்த்து போராடினாரா?, அப்போது எங்கே சென்றிருந்தார் அவர்.

பாஜக ஆர்எஸ்எஸுக்கு எதிராக, பாசிச ஆட்சிக்கு எதிராக திமுகவுடன் இணைந்து நாங்கள் போராடி வருகிறோம். இந்தியா கூட்டணியில் இணைந்து பயணிக்கிறோம். அதே நேரத்தில் தமிழகத்தில் பட்டா கேட்டு போராடினால், தொழிலாளர்கள் உரிமைக்காக போராடினால் உடனடியாக காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்கின்றனர். தமிழகத்தில் அறிவிக்கப்படாத அவசர நிலை உள்ளதா என்ற கேள்வி எழுகிறது” என்றார். கே.பாலகிருஷ்ணன் இத்தகையப் பேச்சு அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளானது.

இந்நிலையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பாலகிருஷ்ணனின் கேள்விகள் தொடர்பாக இன்று தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியளித்த அமைச்சர் சேகர்பாபு, “நேற்று முன்தினம் வரையில் இந்த ஆட்சியினுடைய செயல்பாடுகளை மனதார புகழ்ந்தவர்தான் கே.பாலகிருஷ்ணன். மகளிர் உரிமை திட்டம் என்றாலும் சரி, விடியல் பயணம் என்றாலும் சரி, புதுமைப் பெண் திட்டம் என்றாலும் சரி முதல்வருடைய செயல்பாடுகள் எதுவாக இருந்தாலும் அனைத்தையும் புகழ்ந்தவர். அவருடைய நெருடல் என்னவென்று புரியவில்லை. அவரின் கோரிக்கைகளை அறிந்து கொண்டுதான், அதற்கு உண்டான பரிகாரத்தை காண முடியும்.

மேலும் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இருப்பதில்லை. அவர்கள்மீது எந்தவிதமான அடக்குமுறைகளோ பயன்படுத்தப்படுவதில்லை. முறையாக வழக்கு பதிந்து அவர்களை மாலைக்குள்ளாக விடுதலை செய்கிறது காவல்துறை. இது சட்டத்தின் ஆட்சி.

பாலகிருஷ்ணன் நேற்று வரை இந்த ஆட்சியை புகழ்ந்து கொண்டிருந்தவர். வருங்காலங்களில் அவர் புகழ்கின்ற அளவிற்கு அவருடைய தேவைகளை நிச்சயமாக செவிசாய்த்து இந்த ஆட்சி நிறைவேற்றும். எல்லோருக்கும் எல்லாம் என்று கூறும் முதல்வர், நிச்சயமாக இப்பிரச்னையையும் களைவார். மற்றபடி குற்றம்சாட்ட வேண்டும் என்றே குற்றம் சாட்டுபவர்களுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.” என்று தெரிவித்துள்ளார்.

## விக்கிரவாண்டி தனியார் பள்ளியில் குழந்தை உயிரிழந்த வழக்கு தாளாளர் உள்பட மூவர் கைது

விழுப்புரம், ஜன.5

விக்கிரவாண்டியில் இயங்கி வரும் தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் யுகேஜி படித்துவந்த 4 வயதான குழந்தை லியா லட்சுமி, நேற்று பள்ளி உணவுஇடைவேளையின்போது பள்ளி வளாகத்தில் இருந்த செப்டிக் டேங்கில் விழுந்து பரிதாபமாக உயிரிழந்தது. இந்த வழக்கு தொடர்பாக பள்ளியின் தாளாளர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனியார் பள்ளி வளாகத்தில் மூடப்படாமல் இருந்த கழிவுநீர் தொட்டிக்குள் விழுந்து குழந்தை உயிரிழந்த சம்பவம் பல்வேறு தரப்பினரிடையேயும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. குழந்தையின் மரணத்தில் பல்வேறு சந்தேகங்கள் இருப்பதாக பெற்றோரும், உறவினர்களும் கேள்வி எழுப்பி இருந்த நிலையில் கழிவுநீர் தொட்டிக்குள் இருந்து பள்ளி ஊழியர்கள், குழந்தையை மீட்டு காரில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் சிசிடிவி வீடியோ காட்சிகளை வெளியிட்டு சந்தேகங்களுக்கு பள்ளி நிர்வாகம் பதில் அளித்திருந்தது.



இந்நிலையில் உயிரிழந்த குழந்தை லியா லட்சுமியின் தந்தை பழனிவேல், தனது குழந்தையின் இறப்பிற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி விக்கிரவாண்டி போலீஸில் வெள்ளிக்கிழமை புகார் அளித்திருந்தார். அந்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த போலீஸார் பள்ளியின் தாளாளர் எமில்டா, பள்ளி முதல்வர் டொமில்லா மேரி, உயிரிழந்த குழந்தை லியா லட்சுமியின் வகுப்பு ஆசிரியை ஏஞ்சல் ஆகிய 3 பேரையும் இன்று (சனிக்கிழமை) அதிகாலை தனிப்படை போலீஸார் கைது செய்தனர்.

நேற்று காலை விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தை லியா லட்சுமியின் உடல் பிரேத பரிசோதனை செய்யப் பட்டு குழந்தையின் உடல் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது

இதற்கிடையே உயிரிழந்த குழந்தையின் பெற்றோர்களிடம் முதல்வர் அறிவித்த பொது நிவாரண நிதி ரூ.3 லட்சத்துக்கான காசோலையை அமைச்சர் பொன்முடி பிற்பகலில் வழங்க உள்ளார்.

மாலை தந்தி

05.01.2025

## மாலை தந்தி செய்தி எதிரொலி



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள நடைமேடை பகுதியில் காற்றின் வேகத்தில் புங்கை மரத்தின் எதிர்பாராத விதமாக கிளை முறிந்து விழுந்தது இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.மாலை தந்தி நாளிதழின் செய்தி எதிரொலியாக சிவகங்கை தீயணைப்புத்துறை அலுவலர் நாகநாதன் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் மரக்கிளையை அகற்றும் பணியில் ஈடுபட்டு அப்புறப்படுத்தினார்கள்.

# பிராமணர்கள் பாதுகாப்பு சட்டம் கோரி மதுரையில் இன்று உண்ணாவிரதம்: ஐகோர்ட் அனுமதி

மதுரை, ஜன.5

பிராமணர்கள் பாதுகாப்பு சட்டம் கோரி மதுரையில் இந்து மக்கள் கட்சி சார்பில் இன்று (ஜன.5) உண்ணாவிரத போராட்டம் நடத்த உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்து மக்கள் கட்சி மதுரை மாவட்ட தலைவர் சோலைக் கண்ணன் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "பிராமணர் சமுதாயத்துக்கு எதிராக நடக்கும் அநீதிகளை கண்டித்தும், பிராமணர்கள் பாதுகாப்பு சட்டம் இயற்றக் கோரியும் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி இந்து மக்கள் கட்சி சார்பில் நாளை ( ஜன.5) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையில் மதுரை பழங்காநத்தம் பேருந்து நிலைய ரவுண்டானா அருகில் உண்ணாவிரதம் போராட்டம் நடைபெறுகிறது.

இதில் பிராமண சமூகத்தினர், ஆதிசைவ சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரிகள், குருக்கள்



அனைத்து சமுதாய தலைவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளனர். இந்த உண்ணாவிரத போராட்டத்துக்கு அனுமதி வழங்க கோரி மதுரை மாநகர காவல் துறையிடம் விண்ணப்பித்தோம் இதுவரை அனுமதி வழங்கவில்லை. எனவே, மதுரை பழங்காநத்தத்தில் உண்ணாவிரத போராட்டதுக்கு அனுமதியும், பாதுகாப்பும் வழங்க போலீஸாருக்கு உத்தரவிட வேண்டும்," என்று மனுவில் கூறப்பட்டு இருந்தது

இந்த மனு நீதிபதி நிர்மல் குமார் முன் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், "போராட்டம் நடத்த தேர்வு செய்துள்ள இடம் போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி.

மேலும் இதுபோன்று சென்னையில் நடந்த கூட்டத்தில் பிற சமூகத்தினரை அவதூறாக பேசி, இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதால் சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டது. ஆகையால் தான் அனுமதிவழங்கவில்லை" எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நீதிபதி, கூட்டத்தில் யார்? யார்? கலந்து கொள்கிறார்கள்? அதில் முக்கிய பிரமுகர்கள் யார்? பேச்சாளர்கள் யார்? என்ற எந்த விபரமும் இல்லை. அது குறித்து மனு தாக்கல் செய்ய வேண்டும். மேலும் இறையாண்மைக்கு எதிராகவோ, பிற சமூகத்துக்கு எதிராகவோ பேச மாட்டோம் என உத்தரவாதம் அளித்தால் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றார். இதையடுத்து உத்தரவாத பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அதில், "நாளை நடைபெற உள்ள கூட்டத்தில் 300 முதல் 500 நபர்கள் கலந்து கொள்வார்கள் என்றும், உண்ணாவிரத போராட்டத்தின் போது, பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் எந்த இடையூறையும் ஏற்படுத்த மாட்டோம். உண்ணாவிரத போராட்டத்தின் போது இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டு நடந்து கொள்ளுவோம். எங்களின் கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி அரசு கவனத்தை ஈர்க்கும் வகையில் மட்டுமே பேசப்படும். நீதிமன்றம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் தொடக்கத்தில் இருந்து நிகழ்ச்சி முடியும் வரை அதை கடைப்பிடிப்போம்." எனக் கூறப்பட்டு இருந்தது.

இதனை பதிவு செய்த நீதிபதி உறுதிமொழி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி மனுதாரர்கள் நிகழ்ச்சி நடத்த வேண்டும். இதற்கு போலீஸார் அனுமதி வழங்கி, போதிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

## பழனியில் பிரில்லியன்டியா அறிவியல் கண்காட்சி

பழனி ஜன.5

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே கணக்கன்பட்டியில் உள்ள தனியார் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கான அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. பிரில்லியன்டியா 2025 என்ற தலைப்பில் மாணவர்களின் அறிவியல் திறமைகளை மையமாகக் கொண்டு அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.



ப்ரீ கேஜி முதல் பத்தாம் வகுப்பு வரையிலான மாணவர்கள் இக் கண்காட்சியில் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வடிவமைத்து அறிவியல், விவசாயம், இயற்கை பாதுகாப்பு, விண்வெளி, புவியியல், சுற்றுப்புறச்சூழல், மின்சாரம், பாரத பண்பாடு, கலாச்சாரம், மாநிலங்களுக்கு இடையிலான உணவுகள், உடைகள் உள்ளிட்ட பலவற்றை காட்சி பொருளாக வைத்திருந்தனர். மாணவர்கள் இயற்கை வளங்களை பாதுகாக்கும் முறைகளையும், அவற்றை பயன்படுத்தும் முறைகளையும் அறிவியல் வடிவில் சித்தரித்து விளக்கம் அளித்தனர். மேலும் இயற்கை வளங்களை மதித்து பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் இளம் தலைமுறையினர் அறிவில் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் கண்காட்சி நடத்தப்பட்டது. இதில் பங்கு பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பள்ளியின் முதல்வர் ராதா மகாலட்சுமி ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## தேனி நாடார் சரசுவதி கலை அறிவியல் கல்லூரியில் கருத்தரங்கு

தேனி ஜன.5

தேனி மாவட்டம் வடபுதுபட்டியில் தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "எதிர்காலத்தில் இலக்கியம் மற்றும் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பு "எனும் தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கம் இரண்டு நாட்கள் நடைபெற்றது. கல்லூரியின் துணை முதல்வர் உமாகாந்தி வரவேற்புரையாற்றினார். தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் தலைமை தாங்கினார்.

உப தலைவர் கணேஷ், பொதுச் செயலாளர் ஆனந்தவேல், பொருளாளர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.சிறப்பு விருந்தினர்களாக பூட்டான் நாட்டை சேர்ந்த ஷெரிப்ஷி கலை மற்றும் மனித நேய கல்லூரியின் ஆங்கிலத்






துறை உதவி பேராசிரியர் சித்ரா, கேரளா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆங்கிலத்துறை தலைவரும் மற்றும் உதவிபேராசிரியருமான அப்துல் அதீப் கம்பு ரவன், மதுரை தியாகராஜர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உதவி பேராசிரியர் முனைவர் வரதராஜன், கோயம்புத்தூர் சாய்சய்தன்யா கல்லூரியின் முன்னாள் மாணவி அனிதா ஆகியோர் கலந்து கொண்டனர். கல்லூரி செயலாளர் காசி பிரபு துவக்க உரையாற்றி 131 ஆராய்ச்சி கட்டுரைகள் அடங்கிய பன்னாட்டு கருத்தரங்கு புத்தகத்தை வெளியிட சிறப்பு விருந்தினர்கள் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் முன்னதாக தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆங்கிலத்துறை ஒருங்கிணைப்பாளர் சங்கீதா அறிமுக உரையாற்றினார்.

இந்நிகழ்வில் பல்வேறு மாநில மற்றும் மாவட்டங்களைச் சார்ந்த 221 மாணவிகள் மற்றும் 27 பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியின் முடிவில் ஆங்கில கணினி பயன்பாட்டியல் துறைத் தலைவர் முனைவர் செல்வப்பிரியா நன்றி கூறினார்.



தென்காசி காசி விஸ்வநாதர் கோவிலுக்கு தரிசனம் செய்வது போல் வந்த கடையம் அருகே உள்ள கேளையா பிள்ளையூரை சேர்ந்த ஆனந்த பாலன் என்பவர் தான் கொண்டு வந்த பெட்ரோலை கோவில் வாசலில் ஊற்றி தீயை வைத்துவிட்டு கோவிலுக்குள் செல்ல முயன்றார். அவரை கோவில் பணியாளர்கள் . பொதுமக்கள் உதவியுடன் காவல்துறையினர் பிடித்து தென்காசி காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கீழக்கோட்டையில் சர் ஐசக் நியூட்டனின் பிறந்தநாள் விழா





காளையார் கோவில் ஜன.5

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சர் ஐசக் நியூட்டனின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியர் ராஜபாண்டி வரவேற்றார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி உலகில் வாழ்ந்த விஞ்ஞானிகளில் மிகவும் செல்வாக்கு பெற்றவரும் அறிவியல் புரட்சியில் முக்கிய பங்காற்றியவரும் விஞ்ஞானிகளுக்கு எல்லாம் விஞ்ஞானியாக திகழ்ந்தவர் தான் சர் ஐசக் நியூட்டன். இங்கிலாந்து நாட்டில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த அவர் மிகவும் சிரமப்பட்டு அறிவியலில் ஆர்வம் கொண்டு தண்ணீரில் வேலை செய்யும் கடிகாரத்தை அப்போதே கண்டு பிடித்தார்.

பைனாமியல் தியரம் கால்குலஸ் எனும் நவீன கணிதத்தின் பல்வேறு பிரிவுகளை கண்டு பிடித்தார். புவியீர்ப்பு விசையை கண்டறிந்தார். ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர் வினை உண்டு என்பதை நிரூபித்தார். இது நியூட்டன் விதி என்று




அழைக்கப்படுகிறது."இயற்கையும் அதன் விதிகளும் இருளில் கிடந்தன. நியூட்டன் பிறந்தார் அறிவியல் ஒளி பிறந்தது" என அவரின் இறப்பின் இரங்கல் செய்தியாக பகிர்ந்து கொள்ளப்பட்டது. மாணவர்களும் அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். யாவரும் கேளிர் திட்டத்தின் சார்பாக மாணவர்கள் அனைவருக்கும் அவரவர் அணிகளின் சீருடைகள் வழங்கப்பட்டன.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி வார்டு எண்19 இரயில்வே காலணி சவேரியார்புரம் 3வது குறுக்கு தெருவில் உள்ள மின் கம்பம் சிதலந்தமடைந்த நிலையில் காணப்படுகிறது மேலும் பலத்த காற்று வீசினால் கீழே விழும் தருவாயில் உள்ளது. ஏதேனும் அசம்பாவிதம் நடைபெறும் முன்னரே சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






## அறிஞர் அண்ணா பிறந்த நாளினை சிறப்பிக்கின்ற வகையில், பள்ளி மாணாக்கர்களுக்கான மாவட்ட அளவிலான மிதிவண்டி போட்டி

சிவகங்கை ஜன.5

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட சிவகங்கை அரண்மனை வாசல் அருகில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளினை சிறப்பிக்கின்ற வகையில், பள்ளி மாணாக்கர்களுக்கான மாவட்ட அளவிலான மிதிவண்டி போட்டிகளை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் கொடியசைத்து துவக்கி வைத்தார்.



இப்போட்டியானது, 13 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 15கி.மீ தூரமும், 13வயதிற்குட்பட்ட மாணவியர்களுக்கு 10கி.மீ தூரமும், 15 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 20கி.மீ தூரமும், 15 வயதிற்குட்பட்ட மாணவியர்களுக்கு 15 கி.மீ தூரமும், 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 20 கி.மீ தூரமும், 17 வயதிற்குட்பட்ட மாணவியர்களுக்கு15 கி.மீ தூரமும் என பல்வேறு பிரிவுகளில் நடைபெற்றது. இப்போட்டியில், மொத்தம் 300க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டியில் பங்கேற்று முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு, முதல்பரிசு ரூ.5000/மும், இரண்டாம் பரிசு ரூ.3000/மும், மூன்றாம் பரிசு ரூ.2000/மும் மற்றும் 4 முதல் 10 இடங்களை பெறுபவர்களுக்கு தலா ரூ.250/மும் ஆகிய பரிசுத் தொகைக்கான காசோலைகள் வெற்றிபெற்ற மாணாக்கர்களின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படவுள்ளது. பாராட்டுச் சான்றிதழ்கள் இந்நிகழ்வின் வாயிலாக உடனடியாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், நகர்மன்றத் தலைவர் சி.எம்.துரை ஆனந்த், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரமேஷ் கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.






வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியராக காயிதே மில்லத் அரங்கில் ஒரு நாள் பயிற்சி, வேலூர் மாவட்டத்தில் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதை தடுத்தல் குறித்து தன்னார்வலர்களுக்கு ஒரு நாள் பயிற்சியை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின் போது துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர். பயிற்சியின் இறுதியில் சான்றுகள் வழங்கப்பட்டது.

## ஜன.23 மானா மதுரை வட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்! ஆட்சியர் தகவல்

சிவகங்கை ஜன.5

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை அரசாணை (நிலை) எண்:22 நாள்: 29.01.2024ன் படி மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட அலுவலர்களும் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து



நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதிசெய்யும் பொருட்டு 2025 ஆம் ஆண்டிற்கு சிவகங்கை மாவட்டம், மானா மதுரை வட்டத்தில் வருகின்ற 23.01.2025 அன்று "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டம் நடைபெற உள்ளதால் துறை அலுவலர்கள் பொதுமக்களிடம் வந்து மனுக்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

இருப்பினும், பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை நேரில் கொடுக்க விரும்பினால் வருகின்ற 08.01.2025 முதல் 20.01.2025 வரையிலான அரசு அலுவலக நாட்களில் மானாமதுரை வட்டத்திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## பம்மலில் சுற்றுச்சூழல் பாதுகாக்க வலியுறுத்தி மரக்கன்றுகள் வினியோகம்

பம்மல் ஜன.5

லைன்ஸ் கிளப் ஆப் சென்னை சங்கம் லயன்ஸ் கிளப் ஆப் கிரீன் சிட்டி மற்றும் நரேஷ் ஆரோக்கிய மையம் இணைந்து நடத்திய சக்கரை நோய் பல் மற்றும் பொது மருத்துவ இலவச முகாம் நடைபெற்றது ..

சென்னை அடுத்த பம்மல் பகுதியில் லைன்ஸ் கிளப் ஆப் சென்னை சங்கம் லயன்ஸ் கிளப் ஆப் கிரீன் சிட்டி மற்றும் நரேஷ் ஆரோக்கிய மையம் இணைந்து நடத்திய சக்கரை நோய் பல் மற்றும் பொது மருத்துவ இலவச முகாம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாக்க வலியுறுத்தி மரக் கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி அரிமா செந்தில் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக மண்டல தலைவர் லையன் மோகன் பாபு வட்டார தலைவர் லையன் ஜவகர் உமாபதி



கலந்துகொண்டு ஆகியோர் மருத்துவ முகாம் தொடங்கி வைத்தனர். பின்னர் அதனைத் தொடர்ந்து மாவட்ட தலைவர் லையன் பி.ஆர். எஸ்.சரவணன்ராஜ் பங்கேற்று மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு வழங்கி சிறப்பித்தனர் பின்னர் பம்மல் பிரதான சாலையில் வாகனத்தில் பயணிக்கும் பொது மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி அனைவருக்கும் உற்சாகத்தை ஏற்படுத்தினர்.

இதில் கிரீன் சிட்டி அரிமா சங்கம் நிறுவனர் அரிமா நா. கண்ணன் சென்னை சங்கமம் அரிமா சங்கம் நிறுவனர் ஜாகிர் உசேன் நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## இளையான்குடி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கனிமொழி பிறந்தநாள் மரம் நடவு செய்து கொண்டாடிய தமிழரசி எம் எல் ஏ



இளையான்குடி ஜன05

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் நாடாளுமன்றக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பிறந்த தினத்தை முன்னிட்டு சாலைகிராமம் அருகில் உள்ள புதுக்கோட்டை ஊராட்சியில் இனிப்புகள் வழங்கி ஐநூறுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டது.

சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி மரக்கன்றுகளை நட்டுவித்து பேசுகையில் திராவிட மாடல் ஆட்சியில் எண்ணற்ற பல மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் நடைபெற்று வருகிறது. மீண்டும் திமுக ஆட்சிதான் எனவும் பெருமிதம் தெரிவித்தார்..இதேபோல் பிறந்தநாள் காணும் கனிமொழி நீடூழி வாழ வேண்டும் என பொது மக்களோடு இணைந்து வாழ்த் துகளை தெரிவித்துக் கொண்டனர்...

இளையான்குடி தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் ஆறு.செல்வராசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய கவுன்சிலர் மலையரசி ரவிச்சந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் தமிழ் மணி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா.தனசேகரன், மாவட்ட பிரதிநிதிகள் ரவிச் சந்திரன், தயாளன், நன்னியார் கிளைச் செயலாளர் தங்கச்சாமி, ஞானமுத்து, அமுல்ராஜ் மைக்கேல்ராஜ், இளைஞர் அணி பா செந்தில், கபில் மனோஜ் , தனமணிகண்டன் , வினோத், மூத்த உறுப்பினர் அடைக்கலம், சாலகிராமம் செயலாளர் நைனா முகமது, நல்லகனி கஸ்பார், கிளைச்செயலாளர் போஸ் இளைஞரணிஜகதிரேசன் , இளைஞரணி ஸ்டாலின், தகவல் தொழில் நுட்ப அணி தமிழ்மணி, ஆரோன், மற்றும் புதுக்கோட்டை ஊராட்சிகிராம பொதுமக்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இளைஞரணி அமைப்பாளர் தனசேகரன் நன்றி கூறினார்.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து அனைத்துத்துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், சென்னிமலை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் காயத்ரி இளங்கோ, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் எஸ்.ஆர்.எஸ். செல்வம், சென்னிமலை பேரூராட்சித்தலைவர் ஸ்ரீதேவி உட்பட பலர் உள்ளனர்.

## தென்காசி மாவட்டத்தில் அறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு மிதிவண்டி போட்டியினை துவக்கி வைத்த ஆட்சியர்






தென்காசி ஜன.5

தென்காசி மாவட்டத்தில் அறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு இளைஞர்நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டியினை தென்காசி ஐ.டி. குத்துக்கல்வலசையில் நேற்று தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பழனிநாடார் சங்கரன் கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், துவக்கி வைத்தார்.

இப்போட்டியில் 13 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 15 கி.மீதூரமும், 13 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கு 10 கி.மீட்டர் தூரமும், 15 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 20 கீ.மீட்டர் தூரமும் 15 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கு 15கி. மீட்டர் தூரமும், 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 20 கீ.மீட்டர் தூரமும் 17 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கு 15 கி.மீட்டர் தூரமும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்ததாவது,

13 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் சந்துரு முதலிடமும், நவபாரதி இரண்டாம் இடமும், மாதேஷ் மூன்றாவது இடமும், அப்துல்ராசிக் நான்காவது இடமும், முகம்மது அஜ்மல் ஐந்தாவது இடமும், நளன் கைலாஷ் ஆறாவது இடமும், விஷ்ணுபிரவின் ஏழாவது இடமும், கிஷோர் எட்டாவது இடமும், நரேன் வெங்கட் ஒன்பதாவது இடமும், வீர மணிகண்டபிரபு பத்தாவது இடமும் பெற்றனர். 13 வயதிற்குட்பட்ட மாணவிகள் பிரிவில் மகூஷிரேனி முதலிடமும், ராஜஸ்ரீ இரண்டாம் இடமும், ஜெயசங்கரி மூன்றாவது இடமும், வேல்ஹர்ஷிதா நான்காவது இடமும், வைஷ்ணவி ஐந்தாவது இடமும், சில்வியஸ்ருதி ஆறாவது இடமும், மகாஷினி பிரவின் ஏழாவது இடமும், லேவந்திகா எட்டாவது இடமும், அபிராமி ஒன்பதாவது இடமும், ஹரினி பத்தாவது இடமும் பெற்றனர். 15 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் நிதாந்தனி முதலிடமும், முகம்மதுசைபுல்லா இரண்டாம் இடமும், சாரதி மூன்றாவது இடமும், மாதவபிரசாத் நான்காவது இடமும், ராகுல் ஐந்தாவது இடமும், ஸ்ரீராம் ஆறாவது இடமும், பாஸ்கர் ஏழாவதுஇடமும், வைகுண்டராஜா எட்டாவது இடமும், மாரி செல்வம் ஒன்பதாவது இடமும், லெனின் சன்முகவேல்

பத்தாவது இடமும் பெற்றனர். 15 வயதிற்குட்பட்ட மாணவிகள் பிரிவில் மரியசெல்சியா முதலிடமும், சிவமதி இரண்டாம் இடமும், லூர்துவின்சி மூன்றாவது இடமும், துளசி நான்காவது இடமும், அபிநயா ஐந்தாவது இடமும், முகிதா ஆறாவது இடமும், இந்துமதி ஏழா வது இடமும், பூர்னிசா எட்டா வது இடமும், ஷரிபா ஒன்பதாவது இடமும், பவித்ரா பத்தாவது இடமும் பெற்றனர். 17வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் ராஜாபாண்டி முதலிடமும், சிவா இரண்டாம் இடமும், கபிலன் மூன்றாவது இடமும், கோபி நான்காவது இடமும், மகா கண்ணன் ஐந்தாவது இடமும், கௌதம் ஆறாவது இடமும், சுதாராஜன் ஏழாவது இடமும், இசக்கி முத்து எட்டாவது இடமும், ஸ்ரீபராசுராமன் ஒன்பதாவது இடமும், சிவபாலகன் பத்தாவது இடமும் பெற்றனர். 17 வயதிற்குட்பட்ட மாணவிகள் பிரிவில் ராகவி முதலிடமும், மகாலெட்சுமி இரண்டாம் இடமும், ஸ்வாதி மூன்றாவது இடமும், குமரசெல்வி நான்காவது இடமும், ராமலெட்சுமி ஐந்தாவது இடமும், ரஞ்ஜனி ஆறாவது இடமும், புனிதா ஏழாவது இடமும், காவியா எட்டாவது இடமும் பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக ரூ, 5000மும் .இரண்டாவது பரிசாக ரூ.3000 மும். மூன்றாம் பரிசாக ரூ. 1000 மும், நான்காம்பரிசு முதல் பத்தாம் பரிசு வரை ரூ.250ம் அவர்களது வங்கிகணக்கில் வரவுவைக்கப்பட உள்ளது. என மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தெரிவித்தார்.

வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பழனிநாடார் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தென்காசி மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர்நலன் அலுவலர் ராஜேஷ், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இன்று தேவகோட்டை தாலுகா அலுவலகத்தில், ஆதார் மையம் வழக்கம் போல் செயல்படும்

சிவகங்கை ஜன.5

சிவகங்கை மாவட்டத்தில் புதிய ஆதார் எடுக்கவும், ஆதார் கார்டு உள்ளவர்கள் ஆதார்களில் திருத்தங்கள் மேற்கொள்ளவும், மாவட்டம் முழுவதும் ஆதார் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவ்வாறு செயல்படும் ஆதார் மையங்களின் வாயிலாக, பொதுமக்கள் தங்களது ஆதார் கார்டுகளில் திருத்தங்கள் மேற்கொண்டும், புதிதாக ஆதார் கார்டு பெறுவதற்கும்



விண்ணப்பித்து வருகின்றனர்.

இந்நிலையில், தாலுகா அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலகங்களில் செயல்பட்டு ஆதார் சேவைமையங்களானது ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு விடுமுறை நாட்களில் செயல்படுவதில்லை.

வேலைக்கு செல்பவர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளின் வசதிக்கென விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை தோறும், ஒவ்வொரு தாலுகா வாரியாக சுழற்சி முறையில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், வருகின்ற ஜனவரி5 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தேவகோட்டை தாலுகா அலுவலகத்தில் ஆதார் மையம் வழக்கம் போல் செயல்படும். எனவே, பொதுமக்கள் இதனை பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையை சீர்குலைப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி உதவி கமிஷனர் அலுவலகத்தில் புகார்

கூடுவாஞ்சேரி, ஜன.5

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையை சீர்குலைப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி கூடுவாஞ்சேரி உதவி கமிஷனர் அலுவலகத்தில் ஏராளமான நிர்வாகிகள் பரபரப்பு புகார் கொடுத்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் மாநில தலைவர் டைமன்ராஜா வெள்ளையன், செங்கல்பட்டு மாவட்ட தலைவர் இம்மானுவேல் ஜெயசீலன், செயலாளர் உமாபதி, பொருளாளர் கார்த்திக் ஆகியோர் தலைமையில் 100க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் சங்கத்தினர் கூடுவாஞ்சேரி ஜிஎஸ்டி சாலையில் பட்டாசு வெடித்து கோஷமிட்டபடி ஊர்வலமாக வந்து கூடுவாஞ்சேரியில் உள்ள உதவி போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பரபரப்பு புகார் மனு கொடுத்தனர். அந்த புகார் மனுவில் கூறுகையில், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் தேதி சென்னையில் நடை பெற்ற பொதுக்குழுவில், மூத்த நிர்வாகிகளின் முன்னிலையிலும், மாவட்ட தலைவர்களின் முன்னிலையிலும், வியாபார பெரு மக்கள் முன்னிலையிலும்,




ஜனநாயக முறையில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் மாநில தலைவராக டைமன் ராஜாவெள்ளையன் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்.

சில எதிர்பாராத குழுக்கள், எங்களது பெயரையும் அமைப்பையும் சீர்குலைக்கும் நோக்கத்துடன் தவறான தகவல்களை சமூக வலைதளங்கள் மற்றும் பிற வழிகளில் பரப்பி வருகின்றனர். இந்த செயல்கள் எங்கள் அமைப்பின் தார்மீகப் பெயருக்கு களங்கம் விளைவிக்கின்றன மற்றும் அமைப்பின் செயல்பாடுகளை சீர்குலைக்கும் நோக்கத்துடன் நடைபெறுகின்றன.

எங்களது அமைப்பின் தலைவராக டைமன் ராஜா வெள்ளையன் தனது தந்தை சுதேசிநாயகர்வெள்ளையன் அவர்களின் வாரிசாகவும், மூத்த நிர்வாகிகளின் ஆதரவுடன் சட்டப்பூர்வமான முறையில் தலைவராக உள்ளார்.

எனவே இந்த அமைப்பின் சட்டப்பூர்வ உரிமையாளர் டைமன்ராஜாவெள்ளையன் என்பதை உறுதிப்படுத்தி, மேற்கண்ட தவறான தகவல்களை பரப்பும் சௌந்தர்ராஜன் தூண்டுதலின் பேரில், பம்மல் ராஜ், அஸ்தினாபுரத்தை சேர்ந்த வெங்கடேசன், பிரபா கரன் ஆகியோர் மீது உரிய விசாரணை நடத்தி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று இவ்வாறு அந்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் நிர்வாகிகள் மற்றும் சங்கத்தினர் ஜிஎஸ்டி சாலையில் பட்டாசு வெடித்துவிட்டு கோஷமிட்டபடி ஊர்வலமாக வந்து கூடுவாஞ்சேரி உதவி போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் மனு கொடுத்த சம்பவம் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

சிவகங்கையில் நடைபெற்ற பள்ளிக் கல்வித் துறை சார்பாக நடைபெற்ற சிலம்பாட்ட போட்டியில் வீரவிதை சிலம்ப அணி மாணவிகள் ஜெய ஸ்ரீ, சோபனா ,புவனேஷ்வரி,தாட்சாயிணி நான்கு பேர் முதலிடமும், ஹரிதாஸ்ரீ, தன்சிகா இரண்டு பேர் இரண்டாமிடமும், பிரேமவர்ஷிணி ஐஸ்வர்யா மூன்றாமிடமும் பெற்று அணிக்கு பெருமை சேர்த்தனர்.

# நீலமலைகோட்டை காட்டு யானைகளை கட்டுபடுத்த கும்கி யானைகள் வரவழைப்பு



திண்டுக்கல் ஜன.5

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி வனச் சரகத்தில் நீலமலைக்கோட்டை கிணத்துப் பட்டி புதுஎட்ட நாயக்கன்பட்டி பண்ணைப்பட்டி கோம்பை பகுதிகளில் விவசாய நிலங்களில் சேதம் ஏற்படுத்தும் காட்டு யானைகளை கட்டுப்படுத்த டாப்ஸ்லிப் யானைகள் முகாமிலிருந்து சின்னத்தம்பி என்ற கும்கி யானையும் முதுமலை யானைகள் முகாமில் இருந்து கிருஷ்ணா என்ற கும்கி யானையும் நீலமலை கோட் டைக்கு வரவழைக்கப்பட்டுள்ளது.

மேலும் தேனி வைகை அணையில் இருந்து திலீபன் வனச்சரக அலுவலர் தலைமையில் வன உயர் அடுக்கு படை மற்றும் ஒட்டன்சத்திரம் வத்தலகுண்டு வனச் சரகங்களில் இருந்து அதிவிரைவு படை வரவழைக்கப்பட்டு திண்டுக்கல் மண்டல வனப் பாதுகாவலர் காஞ்சனா மற்றும் திண்டுக்கல் மாவட்ட வன அலுவலர் ராஜ்குமார் அவர்களின் அறிவுரையின் படி கன்னிவாடி வனச்சரக அலுவலர் ஆறுமுகம் தலைமையில் காட்டு யானைகளை வனப் பகுதிக்குள் விரட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.



அறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தூத்துக்குடி மாவட்டப் பிரிவு சார்பில், மாணவ/மாணவிகள் கலந்து கொண்ட சைக்கிள் போட்டியினை தருவை விளையாட்டு மைதானத்தில் இருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், கொடியசைத்து துவக்கி வைத்தார்.மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் ,மாவட்ட விளையாட்டு அலுவலர் அந்தோணி அதிஷ்டராஜ் ஆகியோர் உடன் உள்ளனர்.




மதுரை புதூர் ஜவகர் புறத்தில் தனியார் மண்டபத்தில் நடைபெற்ற திமுக மகளிர் அணி ஆலோசனைக் கூட்டம் மற்றும் கனிமொழி எம்பி பிறந்தநாள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது மதுரை மாநகர் மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளர் மண்டலத் தலைவி சரவண புவனேஸ்வரி தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்டச் செயலாளர் தளபதி எம்எல்ஏ முன்னால் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் மேயர் குழந்தைவேலு சின்னம்மாள் மற்றும் பலர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# ஒட்டன்சத்திரம் தொகுதி வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்ட உணவுத்துறை அமைச்சர்

ஒட்டன்சத்திரம், ஜன.5

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, தலைமையில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஒட்டன்சத்திரம் காமாட்சி திருமண மண்டபத்தில் ஆய்வு மேற்கொண்டார்.




உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, பொதுப்பணித்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மின்சார துறை, வனத்துறை மற்றும் பல்வேறு துறைகள் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்தும். நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் நிறைவேற்றப்படவுள்ள திட்டப்பணிகள் குறித்தும் துறை அலுவலர்களுடன் இன்று ஆய்வு மேற்கொண்டார். நடைபெற்று வரும் பணிகளின் தற்போதைய நிலை, அறிவிக்கப்பட்ட பணிகளை தொடங்குவதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு தேவையான மின் இணைப்புகள், மின் மோட்டார்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளன. மேலும், மேடான பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் வகையில் இத்திட்டத்தில் சில மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

“மரம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும்“ என்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வாக்குப்படி, மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இடையக்கோட்டையில் 6.40 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கீரனூரில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம், கள்ளிமந்தையத்தில் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம், பெண்கள் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டட ரூ.22.00 கோடி நிதி அனுமதி வழங்கப்பட்டுள்ளன. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

பரப்பலாறு, நங்காஞ்சியாறு மற்றும் தலைக்குத்து ஆகிய இடங்களில் சுற்றுலாத்தலங்கள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நரிக்கல்பட்டியில் கைத்தறிப்பூங்கா அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை கொண்டாடும் வகையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதற்காக டோக்கன் வழங்கும் பணி இன்று முதல் மேற்கொள்ளப்படுகிறது என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் கப்பிளியப்பட்டி கிருஷ்ணகவுண்டன்புதுரில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டுமான பணிக்கான ஆணையை வழங்கினார். மொத்தம் 69 பயனாளிகளுக்கு ரூ.7.83 இலட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.ஹா. சேக்முகையதீன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பழனி சார் ஆட்சியர் சீ.கிஷன்குமார், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மு.அய்யம்மாள், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் நகராட்சித் தலைவர் க.திருமலைச்சாமி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் கா.பொன்ராஜ், கூட்டுறவு சங்கங்கள் இணைப் பதிவாளர் சி.குருமூர்த்தி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் சுபாஷினி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற் பொறியாளர் மாரியப்பன், நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டம் உதவிப்பொறியாளர் பொன்னுவேல், வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதீஸ்வரன், ராஜாமணி, அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# மலைச்சாலையில் பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவு பொருட்களை போடாதீர் ஐயப்ப பக்தர்கள் பொதுமக்களுக்கு வனத்துறை விழிப்புணர்வு

கம்பம், ஜன.5:

தமிழக கேரள எல்லையில் உள்ள கம்பம் மெட்டு மலைச்சாலையில் பிளாஸ்டிக் மற்றும் கழிவு பொருட்களை போடாதீர் என்று பொதுமக்கள், ஐயப்ப பக்தர்களுக்கு மேற்கு வனச்சரகத்தினர் துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தனர் கம்பம் வனச்சரகத்தில் உள்ள கேரளா செல்லும் கம்பமமெட்டு மலைச் சாலையில் தற்போது மண்டல பூஜைக்காக நாள்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்கின்றன. வெளியூர் பக்தர்கள் என்பதால் மலைச் சாலையில் செல்லும் போது பிளாஸ்டிக் மற்றும் உணவு பொருஞ்களை வீசி எறிந்து விடுகின்றனர். இதனால் சுற்றுச் சூழல் பாதிப்பதோடு வன வளத்திற்கு அபாயம் ஏற்படுகிறது. அதனால் கழிவுகளை சாலையில் வீசக்கூடாது என்று துண்டு பிரசுரங்களை க.புதுப்பட்டி பேரூராட்சி சேர்மன் சுந்தரி பாஸ்கரன், வனச்சரகர் ஸ்டாலின் ஐயப்ப பக்தர்கள், பொதுமக்களுக்கு வழங்கினர். வனத்துறை அலுவலர்கள், பேரூராட்சி பணியாளர்கள் இருந்தனர்.







# தேனி சிங்கராஜபுரத்தில் பெற்ற மகனை அரிவாளால் வெட்டி கொலை செய்த தந்தை கைது




தேனி, ஜன.5

தேனி மாவட்டம் வருசநாடு அருகே உள்ள சிங்கராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த தமிழன், ஜெயலட்சுமி தம்பதியின் இரண்டாவது மகன் ரிவின் ராஜ் இவர் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகி தினமும் மது அருந்திவிட்டு வீட்டுக்குச் சென்று தன் தாய் தந்தையிடம் தகராறில் ஈடுபட்டு வந்தார் சம்பவ நாளன்று வெள்ளிக்கிழமை இரவு ரிவின் ராஜ் அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு வீட்டுக்குச் சென்று தன் தந்தையிடம் தகராறில் ஈடுபட்டுள்ளார். பின்பு போதை தலைக்கேறியவுடன் வீட்டில் உள்ள கட்டிலில் படுத்து தூங்கி உள்ளார். இதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ரிவின் ராஜ் தந்தை அருகில் உள்ள அருவாளையை எடுத்து அவரது தலையில் மூன்று இடத்தில் வெட்டி உள்ளார்.

இதில் நிலை தடுமாறிய ரிவின் ராஜ் சரிந்து கீழே விழுந்தார். பின்பு அவரது தந்தை அருகில் உள்ள தனது உறவினர்களிடம் கூறி காவல்துறைக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவல் அறிந்து சென்ற வருசநாடு காவல் சார்பு ஆய்வாளர் ஜெகநாதன் தலைமையில் காவல் துறையினர் சம்பவ இடத்துக்குச் சென்று ரிவின் ராஜை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் டிவின் ராஜ் உயிர் இழந்தார். எனவே தமிழன் என்பவர் மீது கொலை வழக்கு பதிவு செய்து காவல் துறையினர் அவரை கைது செய்தனர். சம்பவம் குறித்து வருஷநாடு காவல் ஆய்வாளர் கண்மணி அவர்கள் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகிறார்.

# தமிழகத்தின் அனைத்து ரேஷன் கடைகளிலும் கருவிழி அடையாள கருவி: அமைச்சர் தகவல்

ஈரோடு ஜன.5

மாநிலத்தில் உள்ள அனைத்து 35000 ரேஷன் கடைகளிலும் 250 கோடி ரூபாய் செலவில் கருவிழி அடையாள கருவிகளை அரசு நிறுவுகிறது என்று உணவுத்துறை அமைச்சர் ஆர் சக்ரபானி தெரிவித்தார். சனிக்கிழமை நடைபெற்ற தமிழக அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், கைரேகை அடிப்படையிலான ரேஷன் அட்டையில் சில சிக்கல்கள் உள்ளதால் புதிய முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. முன்னதாக ஈரோடு முத்து மஹாலில் அரிசி ஆலை இயந்திர கண்காட்சியை அவர் தொடங்கி வைத்தார். ஒழுங்குமுறை சந்தைகளில் கொள்முதல் செய்யப்படும் நெல் மீதான ஒரு சதவீத செஸ் வரியை நீக்கவும், ஹல்லிங் கட்டணத்தை (ரூ. 40 புழுங்கல் மற்றும் 25 கச்சா



அரிசி) உயர்த்தவும், 5 சதவீத ஜி.எஸ்.டியை மத்திய அரசு நீக்க வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். முதல்வர் உரிய நடவடிக்கை எடுப்பார்.

திறந்தவெளி கிடங்குகளில் கொட்டுவதால் நெல் மழையில் நனைந்து வீணாகிறது எனவே ஒரு நெல்லைக் கூட வீணாக்கக்கூடாது என்பதில் முதல்வர் அக்கறை காட்டுகிறார் என்றார். அதனால், அதிகளவில் குடோன்கள் கட்டப்பட்டு, நெல் பாதுகாக்கப்படுகிறது. இந்த அரசு வந்த பிறகு அனைத்து அரிசி ஆலைகளிலும், அரிசி வண்ணம் பிரிக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. இதேபோல், மாவட்டந்தோறும் நெல் நேரடி கொள்முதல் நிலையங்கள் தேவைக்கு ஏற்ப அமைக்க கலெக்டர் தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. தற்போதைய விதியின் கீழ் நெல் கொள்முதல் விலையும் கணிசமாக உயர்த்தப்பட்டு, சன்ன ரகம் ஒரு குவிண்டாலுக்கு ரூ.2400 மற்றும் சாதா ரகம் 2355ஐ தொட்டது. நெல் விவசாயிகளுக்கான ஊக்கத்தொகையும் 10 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு தற்போதையல் உயர்த்தப்பட்டுள்ளது. செப்டம்பர் மாதத்திற்குள் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 2500 ரூபாயை தாண்டும், இதனால் கொள்முதல் விலை குறித்த தேர்தல் வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றும்.

செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஈரோடு எம்.பி.க்கள் கே.இ.பிரகாஷ், அந்தியூர் செல்வராஜ், எம்எல்ஏ டாக்டர் சரஸ்வதி சங்க மாநில தலைவர் துளசிமணி, கவுரவத் தலைவர் கே.பி.சக்திவேல், ஆலோசகர் கே.எஸ்.ஜெகதீசன், செயலாளர் எஸ்.பரணிதரன், பொருளாளர் ராமஅருணாசலம், மாவட்டத் தலைவர் டி.பாலகிருஷ்ணன், செயலாளர் பி.என்.சண்முகசுந்தரம் ஈரோடு மாவட்ட அனைத்து வணிகர்கள் சங்க கூட்டமைப்பு தலைவர் ராஜமாணிக்கம் முன்னாள் எம்எல்ஏ பழனிச்சாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161